# உலகம் கண்ட திராவிடம்

ஆசிரியர்: "பிலியார்"

வெளியிடுவோர்:

நிலவுப் பதிப்பகம், சென்னை.

1949.

# பதிப்பகம் பேசுகிறது

தமிழ் நாட்டின் தலைசிறந்த எழுத்தாளருளொருவரும் உலகியலறிவு நிரம்பப் பெற்றவரும் பத்திரிகையாளர்க் கெல்லாம் 'தாய்ச்சரக்காக'த் திகழ்பவருமாகிய அறிஞர் 'பிவியார்' அவர்களின் அரிய அழகிய இனிய சிறிய 'உலகம் கண்ட திராவிடம்' எனும் நூலை வெளியிடும் பேறு பெற்றமைக்கு உவகையும் பெருமையு மடைகிறோம்.

எளிய தமிழ்த் துணைகொண்டு இன்பத் திராவிடத்தின் மேன்மையை எடுத்துரைத்து, அன்பர்கள் ஆராய்ச்சி யுணர்ச்சிக்கு நல்லுணவு படைக்கிறார் ஆசிரியர்.

திராவிடம் இழந்த மேன்மையைப் பெற்றுச் சிறக்க இந் நூல் ஒரு தூண்டுகோலாகும்.

227. ----நிலவுப் பதிப்பகத்தார்.

# உலகம் கண்ட திராவிடம்

---*---

## தோற்றுவாய்

மொழிவழி மாகாணப் பிரிவினைப் பிரச்னை இப்போது உச்சநிலையிலிருக்கிறது. எந்தெந்த மாகாணம் யார்யாருக்குரியது? எவ்வெவ்மொழி எவ்வெவ் மாகாணத்துக் குரியது? என்று நிர்ணயிப்பது மிகுந்த சிக்கலான பிரச்னை. முக்கியமாக பம்பாய் மாகாணத்திலும், சென்னை மாகாணத்திலுந்தான் இது மிகுந்த குழப்பத்தை யளிக்கிறது.

ஏன்?

இவ் விரு மாகாணங்களில்தான் வெவ்வேறு மொழிகளைப் பேசுவோரின் எண்ணிக்கை பெருந் தொகைகளாக இருக்கின்றன.

இந்த மொழிகள் பல எவ்விதம் உண்டாயின? இம் மொழிகளனைத்தும் தனித்தனி அடிப்படையைக் கொண்டனவா? -அல்லது ஒரு தாய்மையைக் கொண்டு, பல பண்புகளைத் தழுவித் தனித்தியங்கும் குழந்தை மொழிகளா?

பண்டைச் சரித்திரங்களை — வரலாறுகளை ஆராயுமிடத்து, மனிதர்கள் எவ்விதம் ஓரடிப்படையிலிருந்து உற்பவித்தனரோ — தோன்றினரோ, அதேபோல் மொழிகளும் ஓரடிப்படையைக் கொண்டனவாகத்தான் இருக்கின்றன — இருக்கவேண்டும்.

மொழிகள் ஆரிய — திராவிட அடிப்படையைக் கொண்டே பிரிந்தும், தனித்தும் ஆனால், அடிப்படையிற் பிணைப்பு கொண்டும் இலங்குகின்றன.

இப்போது "இந்தியா" என்று வழங்கப்படும் நாடு முழுவதும் 'ஆரிய வர்த்தம்' என்றும், 'பரத வர்ஷம்' என்றும் ஆரியர் என்று கூறிக்கொள்பவர்களும், அவர்களின் அநுதாபிகளும் வாதமிடுகின்றனர்.

ஆனால், 'இக் கூற்று பொய்மையானது' என்று திராவிட — தமிழ் வரலாற்றினர் எதிர்வாதமிடுகின்றனர். 'பொய்மையானது' என்று கூறுவதோடு மட்டுமல்லாமல், 'பரதநாடு' என்பது 'ஆரியநாடு' அன்று என்றும், 'பரதநாடு' என்றால் 'பரதவர் நாடு' என்றும், இது தமிழரின் வழி வழி ஆட்சிக்கு உட்பட்டதென்றும் கூறி சரித்திரச் சான்றுகளையும் எடுத்துக் காட்டுகின்றனர். மற்றும், 'ஆரியர்' என்பதே வடமொழிச் சொல்லல்லவென்றும் எடுத்துக் காட்டுகளுடன் தெளிவு படுத்துகின்றனர்.

## 'ஆரியர்' என்னும் சொற்குப் பொருள்

முற்கால வேத குலத்தினர் தம்மை 'ஆரியர்' என்று அழைத்துக் கொண்டனர். அவ் வினத்தவருக்கும், அனாதி கால திராவிடர்(தமிழர்)களுக்கும் இடைப்பட்ட சரித்திரம் மிகவும் ருசிகரமானது.

"'ஆரியர்' என்பது தனி வடமொழிச்சொல். இச்சொல் லத்தின், கிரீக் — மொழிச் சொல்லான 'ஆர்' (உழுதல்) என்னும் பகுதியினடியாகப் பிறந்தது. பிற்காலத்தே இச் சொல்லானது 'விவசாயிகள்', 'பெருநிலக்கிழார்', 'சிறந்தோர்' என்னும் பொருளில் வழங்கப்படலாயிற்று' என்பது வாதி தரப்பினரின் — ஆரியக் கூற்றினரின் வாதம்.

கல்கத்தாவைச் சேர்ந்த சமஸ்கிருத பேரறிஞரான டாக்டர் கே. எம். பானர்ஜி இக்கூற்றினை மறுக்கிறார். இவர் 'சமஸ்கிருத வேதியர்களுக்கும், உண்மை ஆரிய இனத்திற்கும் சம்பந்தா சம்பந்தம் அறவே இல்லை' என்கிறார்.



இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புற மலைப் பகுதிகளுக்கப்பால் 'ஆரியானா' என்று ஒரு நாடு இருந்ததாம். அப் பகுதியில் இருந்தவர்களே சமஸ்கிருத வேதியர்குலத்தினர் என்றும் யூகிக்கப் படுகிறது.

ஜெர்மானியரும் தங்களை 'ஆரிய'ரென அழைத்துக் கொள்கின்றனர்.

டாக்டர் பானர்ஜியின் வாதப்படி இந்திய ஆரியர்களுக்கும், ஜெர்மானிய ஆரியர்களுக்கும் சம்பந்த மில்லாது போகிறது.

பாரசீக வளைகுடாப் பகுதிக்கு, 'ஆரியானா' என்ற பெயர் ஆரிய மன்னர்களான 'பல்திக்வாதி', 'பிலேசர்' என்றவர்கள் ஆண்ட "ஹாரா" என்ற நாட்டினடியாக இடப்பட்டதாம்.

வேதி என்றால் நெருப்பு. எனவே, வேதியர் என்றால் நெருப்பைப் பூசிப்பவர்களாகின்றனர். பார்ஸீக் காரர்கள் இன்றும் தீயையும், தீக் கடவுளெனப்படும் சூரியனையும் வணங்கும் உண்மை அறிந்ததே! இதிலிருந்து ஆரியரைச் 'செமீதி வகுப்பினர்' என்று கருதுகின்றனர்.

ஆனால், ஆதிகாலத்தில் ஆரிய இனத்தினர் நிலக்கிழார்களாக இருந்தவர்களல்லர். அக்காலத்தில் இவர்கள் அநாகரிக இனமாக ஒதுக்கப் பட்டிருந்தவர்களாவார்கள்.

'லத்தீன், கிரேக்க—மொழிகளின் 'ஆர்' என்ற வேர்ச் சொல்லினடியாக வந்த உழவுத் தொழிலைக் காட்டுவதே 'ஆரியர்' என்ற சொல் என்றும், இச் சொல் 'உழு தொழிலாளர்', 'சிறந்தோர்' என்ற பொருள்களுக்குரியதென்றும்' தற்போது ஆரிய மொழிப் பண்பினர் கூறிக் கொள்வது, சிறந்தவராகிய செமீதியருடன் தங்களை ஒப்பாகக் கூறிக் கொள்ளவும், நாடோடி இனத்தவர்களான ஆரியர்கள் முதலியவர்களைவிடத் தாங்கள் சிறந்தவர்களென்றுகாட்டிக்

கொள்ளையும் இட்டுக்கொண்ட சிறப்பு இடுகுறிப் பெயராக லாம். ஆயினும், இவர்களுடைய கூற்று ஆதாரமற்றது.

எப்படியெனில், இந்த சமஸ்கிருத வேதியர்கள் விவசாயத் தொழிலை சிறந்த தொழிலாக எண்ணிக்கொண்டிருந்ததாகவோ, விவசாயிகளாக இருந்ததாகவோ சரித்திர சான்றுகளில்லை; இவர்களது ஆதிநூல்களிலும் ஆதாரம் காணோம்.

பிராமணர்களே முதல் ஜாதியாகவும் விவசாயிகள் நான்காம் ஜாதியாகவும் இப்போது கருதப்படுகிறார்களல்லவா? எனவே ஆரியர் விவசாயத்தைச் சிறப்பாகக் கருதியவர்கள் என்பதற்கு ஆதாரமில்லை.

## வங்கக் கதை

ஆதி ஆரியர்கள் நாடோடிகள். ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தனர். இந்தியாவுக்கு வந்தபின்னர் இங்குள்ள திராவிட மக்களின் போக்கைப் பின்பற்றி ஒரு சாரினர் விவசாயத் தொழிலை மேற்கொண்டிருக்கலாம்.

இந்த சமஸ்கிருத ஆரியர்கள் உயர்ஜாதியராக மாறியதற்கு வங்காளத்திலே ஒருகதை வழங்குகிறது — வெறும் கதையல்ல சரித்திர வரலாறுதான். அதாவது தமிழ் நாட்டு வெள்ளாள மன்னர் ஒருவரின் சந்ததியார்கள் சிலர் வங்காளத்தை ஆண்டனராம். இந்த வெள்ளாள வம்சத்துக் கடைசி மன்னன் காலத்தில், மகிஷ்யாக்கள் என்ற சமஸ்கிருத பிராமணர்களின் செல்வாக்கு அதிகரித்திருந்தது. ஆனால் அப்போது பிராமணர்களை முதல் ஜாதியராகக் கொள்ளப்படவில்லை. விவசாயிகளே முதல்வர்களாக(முதல் இனத்தவராக)க் கருதப்பட்டனர். ஆயினும் மக்கள் பிராமணர்கள்பால் கொண்ட அன்பினாலோ அல்லது ஏதாவதொரு பரோபகாரத்துக்குப் பிரதிபரோபகாரமாகவோ, பிரா



மணர்களை முதல் ஜாதியராக்கி விட்டனர். இந்த முதல் ஜாதியாருக்குரிய தொழிலான விவசாயத்தையும் இந்த மகிஷ்யாக்கள்கைக் கொண்டனராம்.

ரிக் வேதத்தின்படி ஆரியர்கள் வட துருவப் பகுதியிலிருந்து வந்தவர்களாகின்றனர். தாங்கள் வணங்கும் கடவுளான ஹரி (விஷ்ணு) பாற்கடலில் இருப்பதாக வேதத்தில் கூறிக்கொள்வது அந்தப் பனி மண்டலத்திலிருந்த அவர்களுடைய ஆதித் தலைவனையே குறிப்பிட்டதாகலாம்.

## திராவிட மொழிகளின் தொன்மை

இருபதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவெங்கும் பேசப்பட்ட மொழி தமிழ் மொழிதான் என்று எடுத்துக் காட்டுகிறார் திரு. பி. டி. சீனிவாச அய்யங்கார். டாக்டர் மாக்வீன் என்ற மேனாட்டு சரித்திர ஆசிரியரும், சமஸ்கிருதத்தைவிட மூத்தவை திராவிடமொழிகள் என்று தெளிவு படுத்துகிறார்.

மொழி—எழுத்து வரலாற்று நூலொன்று, சட்டாம்பிகாமி என்ற மலையாளப் புலவரால் எழுதப்பட்டிருக்கிறது. இதன் கையெழுத்துப்பிரதி, இரிஞ்ஞாலகுடியில் கச்சுடைகைமாவிடம் இருப்பதாக, கேரள வரலாறு என்ற நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த சட்டாம்பிகாமி தமது நூலில் “சமஸ்கிருதம் என்ற மொழியின் பதப்பொருள் சுத்தம்செய்து கொடுக்கப்பட்டதாகும்; அப்படியானால் இந்த சமஸ்கிருதமொழி எதிலிருந்து எடுக்கப்பட்டு சுத்தம்செய்யப்பட்டது?” என்று கேள்விபோடுகிறார். இக்கேள்விக்கு அவரே பதிலும்கூறி தெளிவு படுத்துகிறார். அதாவது, சுத்தப்படுத்தி எடுத்துக் கொள்ளப்பட்ட அந்த சமஸ்கிருத மொழியின் தாய்மொழி ஆதித் தமிழ்மொழியாகத்தானிருக்க வேண்டுமென்று அவர் வற்புறுத்திக் கூறுகிறார்.

பெதர்மான் என்ற மேனாட்டுப் புலவர் எழுதிய, "மனித இனம்" என்ற நூலில் ஆரியர் உதவி இல்லாமலே திராவிடர்கள் தங்கள் மொழி, மதம், ஆட்சி முறை, ஆட்சிக் கழகங்கள், சமுதாய நெறிகள் முதலியவற்றை ஆக்கிக் கொண்டார்களென்கிறார். ஆரியர்கள் இந்த நாட்டுக்குள் நுழைவதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்னரே, திராவிடக் கலை சிறப்புற்றுத் தலைசிறந்து விளங்கிற்று. திராவிடர்கள், பொருளாதாரம், போர்த்துறை, எழுத்தறிவுமுதலியவற்றில், கிருஸ்து பிறப்பதற்கு பல்லாண்டுகளுக்கு முன்னரே மிகுந்த ஆற்றல் பெற்றிருந்தனரென்று டாக்டர் குமாரசாமி உறுதிப்பாடான ஆதாரங்கள் காட்டுகிறார். 'என் சைக்ளோபீடியா பிரிட்டானிகா' என்ற ஆங்கில மொழி நிகண்டில் "தென்னிந்தியாவில் வாழ்ந்து வரும் தமிழ், தெலுங்கு, மலையாள, கன்னட மொழி பேசுகிறவர்களின் நேர்வழி மூதாதைகள்தான் திராவிடர்கள். முதலில் இவர்கள் இந்தியா வெங்கும் பரந்து வாழ்ந்துவந்தனர் எனத் தெரிகிறது" எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மனுதர்ம சாஸ்திரத்தைத் தொகுத்த மனுவும் இவர்களை க்ஷத்திரியர்கள்(வீரகுலத்தார்)என்றே குறிப்பிட்டிருக்கிறார். ஆதிநூல்களில் யாரும் இவர்களை சூத்திரர்கள்என்று குறிப்பிட்டதாகக் காணோம். தொல்காப்பியத்திலும் சூத்திரர் என்ற மொழியே காணப்படவில்லை.

தென்னிந்திய தீபகர்ப்பந்தான் இந்திய சரித்திரத்திற்கும் உலக சரித்திரத்திற்கும் ஆதாரங்கள் அளித்து வந்திருக்கிறது என்று எப். ஜே. ரிச்னர்ட் என்பவர் எழுதியிருக்கிறார். சுமேரியர்கள் இத் திராவிடநாட்டினரில் ஒரு பிரிவினரே. திராவிடநாட்டிலிருந்துதான் சுமேரியர்களும், மொழியும் எழுத்துக்களும் அமைக்கும் முறையை கற்றுக் கொண்டனராம். அதற்கு முன்னர் அவர்கள், இயற்கை உருவங்களையே, மொழி குறிப்புகளாக உபயோகித்தனராம். அதாவது மலை என்றால் மலை உருவமும் மனிதரென்றால்



மனித உருவமும் வரைந்து எழுத்தாக உபயோகித்தனராம். திராவிட மக்கள் அங்கு செல்லவாய்த்தபோது தங்கள் மொழியை அடிப்படையாகக் கொண்டு அந்நாட்டு மொழிக்கும் உருவம் அமைத்துத் தந்தனராம். டாக்டர் சுநீதகுமார் சட்டர்ஜி என்பவரும், நாகரிகம் முதன் முதலில் இந்தியாவில்தான் தோன்றியிருக்கலாம்; அதுவும் ஆதிகால திராவிடர்களிடமிருந்தே தோன்றியிருக்குமென்கிறார்.

தமிழ் நாட்டிலிருந்துதான் நாகரிகம் மெசபடோமியா, பாபிலோன் முதலிய இடங்களுக்குப் பரவிற்று. நவீன நாகரிகத்தின் அடிப்பீடம் மெசபடோமியா நாட்டின்நாகரிகமென்பர். எனவே தற்கால நாகரிகத்தின் முதல்தாய் தமிழகமேயாகிறதென்கிறார் ஜான் மார்ஷல் என்பவர்.

டாக்டர் சட்டர்ஜீயின் ஒப்பியல் நூலிலும், கிரேக்கர், சுமேரியர், திராவிடர் ஆகியவர்களின் மொழிகள் தாய்மை உறவு கொண்டிருப்பதாகப் புலனாகிறதென்கிறார்.

பஞ்சாபிலுள்ள ஹாரப்பா சிந்துவிலுள்ள மோகன்ஜதாரா முதலிய இடங்களில் கிடைத்துள்ள கல்வெட்டுகளும் மற்றவகை புதை பொருள்களும் தமிழகக் கலைப்பண்பைக் காட்டுகின்றன. அறிவின் முதல் தந்தையர் திராவிடர்களே யாவார்களென்று "திராவிட இந்தியர்" என்ற நூல் வலியுறுத்துகிறது. கடல்கடக்கும்முறைகளைக்கண்டுபிடித்து கடல் வாணிபத்தைத் தொடங்கியவர்கள் தமிழர்களே (திராவிடர்) என்கிறார் ரிச்சார்டு என்ற ஆராய்ச்சிப் புலவர்.

## வட நாட்டில் தமிழ் மொழி

தமிழ் என்னும் சொல் வடமொழிச் சிதைவென்பர் வடமொழிக் காதலர்கள். இக் கூற்று சற்றும் பொருந்தாது. திருமிளம், திராவிடம் வடமொழிச் சொற்களென்றும் இவற்றின் சிதைவே 'தமிழ்' எனவாயிற்றென்றும் வாதிப்

பது கவைக்குதவாத வாதமேயாகும். ஏனெனில், சமஸ்கிருத மொழியென்ற பலவினக் கூட்டுமொழி, ஆரியர்கள் கங்கைக் கரையில் காலூன்றி வளம்பெற்ற பிறகு தோன்றிய வாய்வழி மொழியேயாகிறது. வேதம் என்றால் வாய்ப்பாட்டு என்று பொருளுளதையும் கவனிக்கவேண்டும். தமிழ் மொழியோ, சமஸ்கிருதம் தோன்றுவதற்குப் பலதலைமுறைகளுக்கு முன்பே தோன்றியதென வடமொழி நூல் இதிகாசங்களே சான்று கூறும்.

தமிழ் மொழி இராமாயண காலத்திலேயே, வடநாட்டில் பரவியிருந்த தென்பதற்கு வால்மீகி இராமாயணம் சுந்தரகாண்டத்தில் ஆதாரமிருக்கிறது. அதாவது அனுமான் இலங்கைக்குச் சென்று சீதையைக் கண்டபோது, வடமொழி விடுத்துத் தமிழ்மொழியில் பேசியதாக வால்மீகி குறிப்பிடுகிறார். சீதையுடன் அனுமான் தமிழில் பேசினாரென்றால் சீதைக்கும் தமிழ் தெரிந்திருந்தது என்றாகிறது. பெண்களுக்கும் அதுவும், ஊர்சுற்றும் வர்த்தகர்களல்லாது, அரசகுடும்ப அந்தப்புறபெண்களுக்கும் தமிழ்தெரிந்திருந்ததென்றால் அந்தக்காலத்தில் தமிழ் அங்கு அதிகமாகப் பரவியிருந்ததென்பது தெளிவு படுகிறது.

ஜான்சிபார் நாட்டில் வழங்கும் ஸ்வாக்லி என்ற மொழியில் இனிமை என்பதைக் குறிச்கும் சொல் 'தமு' என்பதாகும். பாரசீக மொழியில் 'திமிஸ்' என்னும் சொல்லுக்கு அறிவு-பகுத்தறிவு என்றுபொருள். இதனால் தமிழ், ஆபிரிக்கா, பாரசீக நாடுகளிலும் ஒருகாலத்தில் பரவியிருந்திருக்கவேண்டும். கடலுண்டதாகக் கூறப்படும் லெமூரியா நாட்டின் கடைக்குறைப் பகுதிகளாக மேற்கூறிய நாடுகள் இருந்திருக்கலாமென்றும் யூகிக்கின்றனர்.

ஜான்சிபார், சோமாலிலாந்து, அபிசீனியா, எகிப்திய நாடுகளில் இன்னும் தமிழ்ச்சார்பு மொழிகள் பேசப்படுகின்றன. முற்கால அசிரியமொழியில் 'தமுஸ்' என்றால் இறந்து



பட்டவர் அல்லது மூதாதையர் நாடு என்பதைக் குறிக்கும். எனவே தமிழ் என்ற மொழியை, வடமொழி உச்சரிப்புக்கேற்ப திருமிளம் என்றோ திராவிடம் என்றோ ஆரியர் மாற்றிக்கொண்டனரென்பதும் பொருந்தும். (தஞ்சாவூர்-டாஞ்சூர், தரங்கம்பாடி-டிராங்குபார், மதுரை-மஜுரா) என்று பலவூர்களின் பெயர்களை ஆங்கிலேயர் தங்கள் மொழி உச்சரிப்புக் கேற்ப மாற்றிவிட்டது போன்று, ஆரியரும் தமிழ்ப் பெயர்களை மாற்றிக்கொண்டிருக்கின்றனர்.

தமிழில் வடமொழிக்கலப்பு அதிகம் பரவியிருக்கிறதே என்று கேட்கலாம். ஆங்கிலம் அரசமொழியானதும் ஆங்கில சொற்கள்பல தமிழில் இடம்பெறவில்லையா? கலெக்டர், கோர்ட், இன்ஸ்பெக்டர், பங்களா, முதலியவைகள் தமிழ் மொழிபோல் வழங்கப்படுகின்றனவல்லவா?

முஸ்லிம் ஆட்சிக் காலத்தில், உர்தூமொழிச் சொற்களும் தென்மொழிகளில் இடம்பெறவில்லையா? பஞ்சாயத்து, கஜானா, தாசில்தார், ஜமீன்தார், ஜில்லா, தாலுகா இவைகள் உர்தூ மொழிச் சொற்களல்லவா?

ஆரியர் மதத்துறையிலும் இம் மதத்துறையை ஊன்றுகோலாகக் கொண்டு ஆட்சித் துறையிலும் தென்னாட்டில் ஆதிக்கம் கொண்டபோது பல வடமொழி நூல்களைத் தமிழில் பெயர்த்திருக்கின்றனர். அம் மொழி பெயர்ப்பாளர்களுக்குத் தமிழ் மொழியில் அதிகப்புலமை இல்லாதிருக்கலாம்; அல்லது ஆரிய மொழிக்கு முதன்மைதர எண்ணியிருக்கலாம். இவற்றால் மொழி பெயர்ப்புகளில் அதிகமான வடமொழிச் சொற்களைப் புகுத்தியிருக்கலாம். இப்போதும் இக் கூற்றுக்கு ஆதாரமிருக்கிறது. அதாவது இப்போதும் ஆங்கில நூல்களையும் வடமொழி நூல்களையும் தமிழில் மொழிபெயர்ப்பவர்கள், அந்த ஆங்கிலம் அல்லது வடமொழிச்சொற்களுக்குத் தகுந்த சொற்கள் தமிழில் அகப்படாவிட்டால், ஆங்கிலச் சொல்லையும் வடமொழிச் சொல்

லையும் தமிழ்ச் சொல்லமைப்பில் கையாள்கிறார்களல்லவா? சமஷ்டி, புனருத்தாரணம் முதலிய வார்த்தைகள் தினசரி பத்திரிகைகளில் அதிகம் அடிபடுவதற்கு, இந்த 'சொல்ல கப்படாத' குறைதானே காரணம்.

## தமிழ் நாட்டின் எல்லை?

திராவிடர்கள் என்ற இனத்தார் பலுஜிஸ்தானப் பகுதியிலிருந்து வந்தவர்கள் என்கின்றனர் சில ஆராய்ச்சியாளர்கள். இதிலிருந்து மற்றொன்று யூகிக்கக் கிடைக்கிறது. அதாவது தமிழரே, அங்கு அக்காலத்தி லிருந்தனரென்றும் ஆரியர் வருகையால், இடநெருக்கடி ஏற்பட, தென்னாட்டிற்கு நகர்ந்தனரென்றும் எண்ணச் செய்கிறது.

அப்படியாயின், தொல்காப்பியத்தில், தமிழ்நாட்டின் வடக்கெல்லை வடவேங்கடமென்று குறிப்பிட்டிருக்கிறதே என்று கேட்கலாம். திராவிடர் தொன்மையை நோக்குங்கால் தொல்காப்பியம் அண்மைக்கால நூல்தானே! மற்றும் அவருடைய காலத்தில் ஆரியர் தெற்கில் வடவேங்கடம் வரை பரவியிருந்திருக்கலாம். வடவேங்கடத்திற்குத் தெற்கில்தான் தனித் தமிழ்மொழி வழங்கிவந்திருக்கலாம்.

மற்றும் வேங்கடமலை என்பது எது என்றே உறுதியாக நிச்சயிப்பதற்குமில்லை. ஏனென்றால், வேங்கடம் (வேம்—கடம்) என்றால் வெப்பத்தைக் கடந்தது என்று பொருள் படுகிறது. அப்படியானால் வெப்பத்தைக் கடந்த மலை இப்போதுள்ள திருப்பதி திருமலை என்றுகூறவியலுமா? வெப்பத்தைக் கடந்தமலை இந்தியாவின் வடக்கெல்லையான இமயமலைதானே! எனவே, வடவேங்கடமென்றால் சித்தூர் ஜில்லாவுள்ள மலையென்று கொள்வது பொருத்தமாக இல்லையே! 'வேங்கடம்' என்ற சொல்லை ஹிமாசலம் அதாவது குளிர்ந்தமலை பனிமலை என்று ஆரியர் தங்கள் மொழியில் மாற்றியமைத்துக் கொண்டிருக்கலாமல்லவா? மறைக்



காடு என்பது வேதாரண்யமென்று மாற்றப்பட்டிருக்க வில்லையா? குடந்தை கும்பகோணமாகிவிடவில்லையா?

மற்றும் சிந்து — கங்கை என்ற மொழிகளும் தமிழ் மொழிச் சார்பினவேயாகின்றன. சிந்து என்றால் தமிழில் சிவப்பு என்றும் பொருள் இருக்கிறதல்லவா? எனவே சிந்து நதி சிவப்பு நதியாகிறது. கங்கு என்றால் இருட்டு—கருப்பு, ஓரம்—எல்லை, கரை என்றும் பொருள்படும். எனவே கங்கைநதி என்றால் கருப்புநதி என்றோ, எல்லைநதி என்றோ கொள்ளலாம். தென்னாட்டு நதிகள் அதிக ஆழமில்லாததாலும், சூரிய ஒளி நேராகப் படுகிறதாலும் தண்ணீர் பளிங்கு நிறமாக இருக்கிறது. கங்கை நதியோ ஆழமானதாகவும் சூரிய வெளிச்சம் நேரிடையாகப் பட்டுப் பிரதிபலிக்காத தாகவும் இருப்பதால், அதன் தண்ணீரே கருப்பு நிறமாக இருக்கிறது. எனவே அதனைக் கருப்பு ஆறு அதாவது கங்கு ஆறு என்றும் குறிப்பிட்டிருக்கலாம். கங்கு — எல்லை என்பதற்கு இராமாயண வரலாறு ஆதாரமாகிறது. அதாவது ராமன் வனம் புகுந்தபோது கங்கையைக் கடந்தானல்லவா? அப்போது கங்கை, ஆரியநாட்டின் தென் எல்லை என்றுதானே யாகிறது. கங்கையின் ஓடத் தொழிலாளர் தலைவனாக இருந்த குகன் ஆரியனல்லவே! ஆதிகுடிதானே! ஆதிகுடி திராவிடனைத்தானே குறிக்கும். எனவே கங்கைக் கரையில் ராமாயண காலத்திலிருந்த படகோட்டிகள் ஆதிகுடிகள். அதாவது திராவிடர்—தமிழர் என்றுதான் கொள்ளவேண்டும்.

## மொழி வரலாறு

வேதியர் சமஸ்கிருதம் ஒருகலப்பட மொழியே. இதேபோல் சமஸ்கிருத வேதியர்களும் ஒரு தனித்தூய்மை இனத்தவரென்று கூறுவதற்கில்லை. தங்கள் வாழ்க்கைப் பாட்டைத் தேடி அலைந்த இடங்களில் ஆங்காங்கு வசித்த பிற இன மக்களுடன் ஒத்த சம்பந்தம் வைத்துக்கொண்டு

ஒரு கலப்பட இனத்தைத் தோற்றுவித்தனர். எனவே கங்கைக் கரையில் வசித்த ஆரியரும், ஆதி பரதவ குலத்தவருடன் கலந்த ஒரு கலப்பட இனமே. இந்த வேத குலத்தினர் தாங்கள் வழியில் கற்ற பல நாட்டு மொழிகளுடன் திராவிட மொழிகளையும் சேர்த்து சமஸ்கிருதம் என்ற ஒரு புது மொழியைத் தோற்றுவித்துக் கொண்டனர். சமஸ்கிருதம் என்பது, சமஸ்த் — கிருதம் அதாவது எல்லா மொழிகளின் கட்டு என்றும் பொருள் படும். ஹிந்தி, மராட்டி, வங்காளம் முதலியவைகள் சமஸ்கிருதத்தி லிருந்துதான் பிறந்தவை என்பர். தமிழ் மொழிதான் எல்லா இந்திய மொழிகளின் தாய்மொழி என டாக்டர் டெய்லர் என்பவரும் அபிப்பிராயப்படுகிறூர். இந்தியமொழி நூல் ஆராய்ச்சியாளர்களும் இதனை ஒப்புக் கொள்கின்றனர். ஒப்புக்கொள்ளத்தகுந்த ஆதாரங்களும் கண்டிருக்கின்றனர்.

மற்றும் வட இந்திய மக்களில் பெரும் பகுதியோர், திராவிட இரத்தக் கலப்பினர் என்பதும் இவ்வாராய்ச்சியாளரின் தெளிவொளி மெய்மை. எனவே ஆரியர் என்ற சொல்லும் தமிழ் மொழியிலிருந்து வந்ததே ஆகலாம். ஆரியன் எனில் தமிழில் ஐயன் — சிறந்தோன் எனப் பொருள் படும். "உழுதுண்டு வாழ்வரே வாழ்வோர் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்" என்பதிலிருந்து உழுதூண் வாழ்க்கையினரே முதன்மை இனத்தவராக இருந்து வந்தனர். போர்க்குலமறவர் படையாட்சிகள் முதலியவர் இரண்டாம் பகுதியினர். பிராமணர்கள் முதன்மையானவர்களாகக் கருதப்படவில்லை.

திராவிட மொழிச் சாரமே சமஸ்கிருதம என்று "பௌத்த இந்தியா" என்ற நூலில் பேராசிரியர் ரைய்ஸ் டேவிட் என்பாரும் சுட்டிக்காட்டுகின்றூர். 'முற்காலத்தில், இப்போது இந்தியாவென அழைக்கப்படும் கண்டம் முழுவதும் திராவிடர் வசித்து, ஆண்ட பகுதியே. இந்தியாவென்பது முழுவதும் திராவிடநாடே. அங்கு எங்கும்



பேசப்பட்டது திராவிட மொழியே. வடமேற்கு எல்லை வழியாகப் புகுந்த அந்நியர்கள், இத்திராவிட மக்களையும் மொழியையும் தெற்கே ஓட்டிவிட்டனர்.'' என்று டாக்டர் மக்லீன் என்பார் "சென்னை மாகாண ஆட்சி முறை" என்னும் நூலில் தெளிவுறக் குறிப்பிட்டிருக்கிறூர்.

ஆரியர் நம் நாட்டினுள் நுழைந்தபோது, இப்போது கங்கையும் யமுனையும் பாயும் பகுதிகள் சேர்ந்த மத்திய தேசம் தனித் திராவிட ஆட்சி வட்டகையாகும். திராவிடர்கள் அறிவுச் செல்வத்திலும் மொழிச் செல்வத்திலும் மிக்கிருப்பது கண்டு, ஆரியரும் திராவிடக் கலை மொழிச் சார்பாகத் தமக்கென பிற மொழியையும் வாழ்க்கைத் திட்டத்தையும் அமைத்துக் கொண்டனர். இப்புது மொழியும் திராவிடத்திலிருந்து திரட்டப்பட்டதென்பதில் சந்தேகமில்லை.

## திராவிடரா? ஆரியரா?

மேற்படி ஆராய்ச்சிகளைக் கவனிக்குமிடத்து இப்போதுள்ள கலப்பட ஆரியர், ஆரியரா திராவிடரா என சந்தேகிக்க இடமளிக்கிறது. சிலர் திராவிட ஆரியரென்றும் கூறிக்கொள்கின்றனர். ஆரியர் என்ற சொல்லுக்குப் பிச்சை எடுப்பவர் என்ற பொருளும் ஒருவகையாகப் பொருந்தும். 'முட்டிபுகும் பார்ப்பார்' என்பதும் கவனிக்கத்தக்கது. ஆரியக்கூத்தாடினுலும் காரியத்தில் கண்ணுயிருப்பர்' என்ற பழமொழி யுள்ளது. இதிலிருந்து ஆரியர் சிறந்த கூத்தாடிகள் என்ருகிறது. தந்திர ஜாலக் கூத்துகளில் வல்லவர்கள். எனவே அவர்கள் தங்களுடைய ஆரிய மாயக் கண்கட்டு வித்தைகளால், திராவிடர்களை மயக்கியும் மிரட்டியும் தங்களைச் சிறந்த இனத்தவராக பிர்ம்மகுலத்தவராக்கிக் கொண்டனர். இவ்வகையாகப் பிச்சைக்கு வந்தவர்கள் பின் (திராவிடர்க்கு)பெண்ணுக்கு மாப்பிள்ளையாகி வீட்டுக்கும் உரிமையாளராகத் தங்களை ஆக்கிக்கொண்டனர்.

## பரத நாடு

மற்றொரு முக்கிய உண்மையும் தெளிவு படுகிறது. அதாவது இந்த இந்தியாவை பரத கண்டம், ஆரிய வர்த்தம் என்று கூறுவதும் ஒரு ஆரிய வித்தையேயாகும். பரத கண்டம் என்பதற்கு ஆதாரமாக, துஷ்யந்தன் என்னும் ஆரியத் தலைவனுக்கும் விஸ்வாமித்திரருக்கும் (திராவிடர்?) ஆரியக் கூத்தியராகிய மேனகைக்கும் பிறந்த சகுந்தலைக்கும் பிறந்த பரதன் என்பவன் இந்தநாடு முழுவதையும் ஆண்டதால் இந்த நாட்டுக்கு பரத கண்டம் என சிறப்புரிமைப் பெயராயிற்றென ஆரியபுராணம் கூறும். பாரத இராமாயண காலத்திற்கு முன்பு ஆரியர் தென்னாட்டில் காலெடுத்து வைத்ததாக ஆதாரமேயில்லை.

மற்றும் மேற்படி திருமணக் கதையைக் கவனிப்போம். விஸ்வாமித்திரர் யார்? திராவிடர் மன்னர் என்றே யூகிக்கச் செய்கிறது. வசிஷ்டர் என்ற ஆரிய முனிவர் தமது மாய வித்தை (தபோ பலம்) யால் இவரை வென்றதால் இவரும் (விஸ்வாமித்திரர்) அந்த ஆரிய வித்தைகளை அறிய தவம் (விடாமுயற்சி) செய்தார். இதனைக் கெடுக்க, மேனகை என்ற ஆரியக் கூத்தியை, அனுப்பினர். இருவருக்கும் பிறந்தவள் சகுந்தலை. வித்தின் மூலம் இன மாகையால், சகுந்தலை விஸ்வாமித்திரரின் மகளே. திராவிடப் பெண்ணே. எனவே பரதன் ஒரு கலப்புஇனமே. அதாவது ஆரிய திராவிடனே. இந்த இன வரலாறு எவ்விதமிருந்தாலும் இந்தப் பரதன் மூலமாக பரத நாடு ஏற்பட்டதாகக் கூறுவது ஏற்றுகொள்ளத் தகுந்ததாகாது.

இதற்கு ஆரிய வேதமே காரணம் கூறும். மனுவின் சந்ததியாளரெனக் கூறிக் கொள்பவர்கள், உண்மையில், விஸ்வாமித்திரர் என்ற திராவிட மன்னன் தலைமையிலிருந்த திராவிட பரத மக்களின் சந்ததியாகளேயார்வர் என்று லூயிரைஸ் என்பவர், 'மைசூர் கெஜட்' என்பதில் குறிப்



பிட்டிருக்கிறார். எனவே ஆரியர் இந்தியாவிற்குள் நுழைந்த காலத்தில், இந்தியாவை ஆண்டவர்கள், விஸ்வாமித்திரர் தலைமையிலிருந்த பரதவராகிய திராவிட மக்களே. இந்த பரத குலத்தவர் ஆண்டதால்தான் இந்த நாட்டுக்குப் பரத நாடென்று பெயராயிற்று.

ஆரிய ஆதிக்கம் வலுத்த போது, மற்றவர்களைப் போன்றே இவர்கள் ஒடுக்கப்பட்டனர். ஆரிய புராணத்தில் வரும் பரத குலத்தவரும் திராவிட இனத்தினரென்றே "வேத இந்தியா" என்ற நூலில் காணக்கிடைக்கிறது.

:::::::—:::::::